

# ஸ்ரீ மஹாவீர வைபவம்

## (ஸ்ரீ ரகுவீர கத்யம்)

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

**ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ மஹாவீர வைபவம்**

இந்த ஸ்தோத்திரம் ஸ்ரீ ரகுவீர கத்யம் என வழங்கப்படுகிறது. ஸ்வாமி தேசிகன் தாமே இதற்கு ஸ்ரீ மஹாவீர வைபவம் என்ற திருநாமத்தை இட்டருளினார். மஹாவீரன் என்னும் சொல், சக்கரவர்த்தித் திருமகனான இராமபிரானையே குறிக்கும்.

ஸ்தோத்திர வடிவத்தில் வசன நடையில் ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த நூல் இது ஒன்றே. ஸ்ரீ தேசிகன் தமக்கே உரிய முறையில் அந்தந்த இடத்திற்கு ஏற்ற சொற்களை அமைத்து, கம்பீரமான நடையில் அருளிச்செய்த இந்த ஸ்தோத்திரத்தை சொல்பவர்களின் நாவிற்கும், கேட்பவர்களின் செவிக்கும், அர்த்தத்தைக் காண்பவர்களின் உள்ளத்திற்கும் நல்விருந்தாக இருக்கும். இதில் ஏழு காண்டங்கள் கொண்ட ஸ்ரீமத் ராமாயணத்தின் கதைப் பகுதியில், முக்கியமான அம்சங்கள் பொதிந்து திகழ்வதை நன்கு உணரலாம்.

இந்த ஸ்தோத்திரம், ஸ்ரீ தேசிகன் திருவயிந்திபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது, அங்கு ஸந்நிதியில் பிராட்டி, இளையபெருமாள் மற்றும் சிறிய திருவடியுடன், அதிவிலக்ஷணமாக, அதியற்புத திருமேனி கொண்டு ஸேவை சாதிக்கின்ற இராமபிரானின் அழகில் ஈடுபட்டு அநுபவித்து அருளிச்செய்தது.

*********



+

சூரியன் இருளைப் போக்க ஆகாயத்தில் உதிக்கின்றான். சக்கரவர்த்தித் திருமகன் என்னும் சூரியன், தன்னை அண்டியவர்களின் அச்சமென்னும் இருளை ஒழிப்பதற்காக இந்த பூமியில் அவதரித்தான். சூரியனை ஒளி பிரியாதிருப்பது போல், சீதாப்பிராட்டி இராமபிரானைப் பிரியாது நிற்பதால், அவனது பெருமை வெள்ளம் போல் பாய்கின்றது. அவன் பரமாகாசம் எனப்படும் ஸ்ரீவைகுண்ட லோகத்தில் எப்போதும் மஹாசூரியனாக பிரகாசிக்கித்து மேம்பட்டு விளங்குகின்றான்.

ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ மஹாவீர வைபவம்




ஸ்லோகம் (01)

==============

பல்லாண்டு வாழ்க வாழ்க. உலகில் தனக்கு மிக்கவன் இல்லை என்னும்படியாக பகைவர்களும் போற்றுவதற்கு ஏற்றபடி, எல்லையற்ற வீரம் கொண்டு விளங்கும் இராமபிரானே!

ஸ்லோகம் (02)

==============

மனச்சோர்வு அடைவதற்குக் காரணம் இருக்கும்போது, சிறிதும் மனம் மாறுபடாமல் இருத்தலே தைர்யம் எனப்படும். இத்தகைய தைர்யத்தை மிகுதியாகப் பெற்றவர்களுள் முன்னணியில் நிற்கும் இராமபிரானே!

ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ மஹாவீர வைபவம்

(பாலகாண்டம்)

==============




ஸ்லோகம் - (03)

===============

முன்பு ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மூண்ட பெரிய போரில், அங்கு கூடிய தேவர்கள் அசுரர்களை வெல்லத் திறமையின்றி தவித்தபோது, எம்பெருமானாகிய நீ அசுரர்களை வென்று தேவர்களுக்கு உதவி புரிந்தாய். அப்பொழுது கூடியிருந்த எல்லா தேவர்களும், உன்னை மேம்பட்ட

பெருமையுடைவன் என்றும், உன் பெருமைக்கு எல்லையில்லை என்றும் நிர்ணயித்துப் பேசினர்.

ஸ்லோகம் - (04)

===============

இராவணனன் பிரம்மனிடம் பெற்ற வரத்தால் கர்வம் கொண்டு, தேவர்களைத் துன்புறுத்தினான்.  அவ்வாறு நலிவுற்ற தேவர்கள், தசரதன் புத்திரப்பேறு பெறுவதற்காகச் செய்த வேள்வியில் வந்து கூடி, தங்கள் துன்பம் நீங்க வழிகாணுமாறு பிரம்மனிடம் வேண்டினர்.  அந்த சமயம், யாகத்தில் ஹவிர்ப்பாகத்தைப் பெற எம்பெருமானாகிய நீ நேரில் எழுந்தருளினாய். உன்னிடம் பிரம்மன் முதலிய தேவர்கள் இராவணனால் படும் துன்பத்தைத் தெரிவித்து, தசரதனுக்கு புத்திரனாக அவதரிக்கும்படி பிரார்த்தித்தனர்.

தொடரும். . .